1975 மார்ச் 12]

கோயம்புத்தூர் பத்மா மில் தொழிலாளர்கள்

*294 வினு—திரு. என் மருதாசலம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், காளப்பட்டி பத்மா மில்லில், 28—2—1974-ம் தேதி சர்க்கார் முன்னிலேயில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மில் முதலாளி அமுல் படுத்தாதை எதிர்த்து 26—5—1974 முதல் வேலே நிறுத்தம் செய்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம். கோயம்புத்தூர், ஸ்ரீபாலதண்டாயுதபாணி அண்டு கம்பெனியில் (குத்தகைதாரர்: ஸ்ரீபத்மா மில், காளப்பட்டி) கோயம்புத்தூர் மாவட்ட ஆலேத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 19 தொழிலாளர்கள், சென்னே தொழில் தகராறு சிறப்பு நடுவர் மன்றம் தொழில் தகராறு எண் 1/1974-ல் அளித்த தீர்ப்பை செயற்படுத்துமாறு நிர்வாகத்தினைக் கேட்டு 26—5—1974-லிருந்து உள்ளிருப்பு வேலே நிறுத்தம் செய்தனர்.

(இ) அத்தீர்ப்பைச் செயற்படுத்தாமை குறித்து மேற்சொன்ன நிர்வாகத்தினர் மீது வழக்கு தொடருவதற்கு அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, கோயம்புத்தூர், தொழிலாளர் நல ஆய்வாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்னும் அக்ரீமென்டில் இருக்கக்கூடிய இதர பிரச்னேகள் பற்றித் தீர்வு காணவில்லே என்று சொல்லுகிறூர்கள். அதைப்பற்றி அரசின் நிலேமை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நிர்வாகம் சிலவற்றை ஒப்புக் கொள்ளாமல்போன காரணத்தால் ஏ.பி. திருப்பதி என்ற மானேஜிங் டைரக்டர் மீது 29-வது விதி இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்-படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.